Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 15.04.2024 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**நாள் 15.04.2024 திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தமிழகத்தில், நெல்லை மாவட்டம், அகஸ்தியர் பட்டியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பழங்குடி மக்களின் கௌரவம், மற்றும் வளர்ச்சிக்கு, அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி இருப்பதாக மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

தேர்தல் கால சோதனைகளின் போது, நாடு முழுவதும் இதுவரை, 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்களால் நாட்டில் வரி நிர்வாகம் மேம்பட்டு, வரி ஏய்ப்பு குறைந்து இருப்பதாக, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜகதீப் தன்கர் கூறியுள்ளார்.

பிரச்சாரம் 1 (19 )

புதுச்சேரி-தமிழ்நாடு உட்பட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளில், வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மறுநாள் முடிவடையும் நிலையில் அரசியல் கட்சித்

தலைவர்கள், சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டு உள்ளனர். மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தமிழகத்தில், நெல்லை மாவட்டம், அம்பா சமுத்திரம், அகஸ்தியர் பட்டியில் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டார். குடும்பக் கட்சிகள் தங்களின் ஊழலால் தமிழகத்தின் வளர்ச்சியைப் பாழ்படுத்தி விட்டதாகவும், தமிழக மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணியின் நல்லாட்சிக்கே ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறினார். பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் வேளாண்மை மற்றும் மீன் வளத்துறைக்கு பல திட்டங்கள் இடம் பெற்றுள்ளதாகவும், இந்த அறிக்கையை மோடியின் உத்தரவாத அறிக்கை என்றே தமிழக மக்கள் அழைப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

முன்னதாக, கேரளா மாநிலம், ஆலத்தூர் தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் ஒன்றில் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார். நடப்பு மக்களவை தேர்தல் நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் என்று அவர் கூறினார். சாதாரண மக்கள், குறிப்பாக

**பிரச்சாரம் 2 (13)**

ஏழைகளின் நலனை உறுதிப்படுத்துவதே பாரதீய ஜனதாவின் முக்கிய முன்னுரிமை என்றும், கட்சியின் தேர்தல் அறிக்கை, வளர்ச்சி பற்றிய நாட்டு மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையிலேயே அமைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மத்தியில் முன்பு இருந்த காங்கிரஸ் அரசு இந்தியாவை பலவீன நாடாகவே வைத்திருந்த நிலையில் பிஜேபி அரசு தான் வலுவான நாடாக மேம்படுத்தி இருப்பதாக அவர் கூறினார்.

கேரளத்தில் உள்ள இடதுசாரி அரசு, மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களைத் தடைப்படுத்துவதாக திரு.நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். மக்களவை தேர்தலில்

பிஜேபி வெற்றி பெற்றால், மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு, அயராது, தொடர்ந்து பாடுபடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி இன்று மாலை, கேரள மாநிலம் கோழிக்கோட்டில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அமித்ஷா (19)

பழங்குடி மக்களின் கௌரவம், பாதுகாப்பு, மற்றும், பழங்குடி மக்கள் உட்பட அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி இருப்பதாக மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித்ஷா கூறியுள்ளார். திரிபுரா மாநிலம், உனாகோட்டி மாவட்டத்தில் இன்று தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், பழங்குடியினர், நலத் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை, மோடி அரசு, 24 ஆயிரம் கோடி ரூபாயில் இருந்து, 1 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பதாகவும், விடுதலை பெற்ற 25 ஆண்டுகளுக்குப் பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் தான் பழங்குடிப் பெண் ஒருவர், குடியரசுத் தலைவர் பதவியில் அமர்த்தப்பட்டதாகவும் கூறினார். திரிபுராவை முன்னேறிய மாநிலமாக மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ஜெய்ராம் ரமேஷ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வடகிழக்கு மாநிலங்களில் காங்கிரஸ் அலை வீசுவதை தெளிவாக காணமுடிவதாக கூறினார். வடகிழக்கு மாநிலங்களில், மொழி, மதம் மற்றும் பிராந்திய ரீதியிலான பன்முகத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளதாகவும், பன்முகத் தன்மையை பாதுகாப்பதே மிகப்பெரிய சவால் என்றும் கூறினார்.

**தாக்கூர் (11 )**

மேற்கு வங்கத்தில் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களை திரிணாமுல் காங்கிரஸ் தடுப்பதாக மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அனுராக் தாக்கூர் குற்றம் சாட்டியுள்ளார். இன்று சிலிகுரியில் உள்ள, பாக்டோக்ரா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செல்வி. மம்தா பானர்ஜி தலைமையிலான அரசு, மாநில மக்களை புறக்கணிப்பதாகவும், வடக்கு வங்கத்தில் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் நிலை, மிகவும் மோசமாக உள்ளதாகவும் கூறினார். முன்னதாக, சிலிகுரியில் வர்த்தக சமூகத்தினரின் கூட்டம் ஒன்றில் திரு. அனுராக் தாக்கூர் கலந்து கொண்டார். பல்வேறு விளையாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

பறிமுதல் (12)

தேர்தல் காலத்தில் பணம் மற்றும் பொருள் விநியோகத்தை தடுக்கும் வகையிலான சோதனைகளின் போது, சட்ட அமலாக்க அமைப்புகள், நாடு முழுவதும் இதுவரை, 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பில், பணம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்துள்ளன. 2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் ஒட்டு மொத்த மதிப்பை விட, இது, சுமார், 3ஆயிரத்து 475 கோடி ரூபாய் அதிகமாகும். விரிவான திட்டமிடல் மற்றும் மக்கள் பங்கேற்பு மூலமாகவே, இது சாத்தியமாகி இருப்பதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகளுக்கு உதவியதன் மூலம், தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளை மீறியதற்காக 106 அரசு ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும், ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

தன்கர் (12)

செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்களால் நாட்டில் வரி நிர்வாகம் மேம்பட்டு, வரி ஏய்ப்பு குறைந்து இருப்பதாக, குடியரசு துணைத்தலைவர்

திரு. ஜகதீப் தன்கர் கூறியுள்ளார். இதனால் வரி கட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கை அதிரிகரித்து, வரி விதிகளுக்கும் இணங்கும் போக்கும் மேம்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்திய வருவாய்ப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் அதிகாரிகளுக்கு, நாக்பூரில் உள்ள தேசிய நேரடி வரிகள் கழகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பின் நிறைவு விழாவில், இன்று அவர் உரையாற்றினார். வரி விதிப்பு மற்றும் வரி வசூல் நடைமுறைகள், காகிதம் மூலமாக அன்றி, மின்னணு முறையில் மேற்கொள்ளப் படுவதால், பொறுப்புணர்வும், வெளிப்படைத் தன்மையும் அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். மஹாராஷ்டிரா ஆளுநர் திரு. ரமேஷ் பைஸ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**புதுச்சேரி (19)**

முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான தேர்தல் ஆணையத்தின் **ஸ்வீப்** திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, 3ஆம் பாலினத்தவர்களுக்கான, பிரத்யேக வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கருத்தரங்க கூடத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான திரு.குலோத்துங்கன் இதில் கலந்து கொண்டு தேர்தல் திருவிழா அழைப்பிதழ்களை வழங்கி உரையாற்றினார். தேர்தலில் தவறாமல் வாக்களிக்கவும், மற்றவர்களை ஊக்குவிக்கவும், திருநங்கைகள் இந்நிகழ்ச்சியின் போது உறுதியளித்தனர்.

முன்னதாக, ஸ்வீப் திட்டத்தின் கீழ், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமுதாயக் கல்லூரி வளாகத்தில், கல்லூரிகளுக்கு இடையே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, **ஸ்பைக் பெஸ்ட்** என்னும் **கையுந்து பந்துப்** போட்டிகளை, மாவட்ட உதவி ஆட்சியர் திரு. யஷ்வந்த் மீனா இன்று தொடக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் திருமதி லலிதா ராமகிருஷ்ணன், கல்லூரியின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு முதன்மை அதிகாரி திருமதி லதா பார்த்திபன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த முப்பது அணிகள் பங்கேற்கும் இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு, நாளை மாலை நடைபெறவுள்ள விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

**ஜெய்சங்கர் (14)**

உலகப் புரிதலுடன் பெரிதாக சிந்தித்து, துணிச்சலான முடிவுகளை மேற்கொள்ளக் கூடிய பிரதமர் திரு. நரேந்திர மோடி போன்ற தலைவரால் தான் தேசிய முன்னேற்றத்தை சாதிக்க முடியும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இன்று பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா தற்போது, விஸ்வ பந்து-வாக மேம்பட்டுள்ளதாகவும், ஜி-20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை, உறுப்பு நாடுகளுக்கு திருப்தியான விதத்தில் இந்தியா நிர்வகித்து இருப்பதாகவும் கூறினார். உக்ரைன் போர், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் சவால்கள் போன்ற பல்வேறு பிரச்சனைகளில் திரு.நரேந்திர மோடி போன்ற வலுவான தலைவர் தான் இந்தியாவிற்கு உதவ முடியும் என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். முற்போக்கு சிந்தனை கொண்ட திரு. நரேந்திர மோடி

போன்ற ஒரு தலைவரும், தனிப் பெரும்பான்மையுடன் கூடிய வலுவான ஒரு அரசும் தான், தேசிய முன்னேற்றத்தைக் கொண்டு வர இயலும் என்று அவர் மேலும் கூறினார்.

**எல்லைப் பகுதி (9)**

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் சீனத் துருப்புகளின் அத்து மீறல் குறித்து இந்தோ-திபெத் எல்லைக் காவல் படையினர், மத்திய உள்துறை அமைச்சகத்திடம் அறிக்கை கொடுத்து இருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியான தகவல், தவறானது, தீய நோக்கம் கொண்டது என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கோடைக் காலத்தில் பனி உருகத் தொடங்கும் போது, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் 19 இடங்களில் சீனத் துருப்புகளின் அத்து மீறலுக்கு வாய்ப்பு இருப்பதாக, இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையினர் அறிக்கை கொடுத்து இருப்பதாக, சம்பந்தப்பட்ட சமூக ஊடகப் பதிவில் கூறப்பட்டு இருந்தது.

அமர்நாத் யாத்திரை (7)

தெற்கு காஷ்மீரில் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள அமர்நாத் பனிக்குகை கோயிலுக்கான யாத்திரை, வரும் ஜூன் 29ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், இதற்கான ஆன்லைன் பதிவு நடைமுறைகள் இன்று தொடங்கி உள்ளன. யாத்ரீகர்கள், உரிய மருத்துவ சான்றிதழ்களுடன், இதற்கான இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு அமர்நாத் யாத்திரை, ஆகஸ்ட் 19ஆம் தேதி வரை, 52 நாட்களுக்கு நடைபெறும்.

**ஐபிஎல் (5)**

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில், பெங்களூர்-ஹைதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சென்னை-மும்பை அணிகளுக்கு இடையே, மும்பையில் நடைபெற்ற போட்டியில், சென்னை அணி, 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**வானிலை (12)**

தமிழகத்தில் அடுத்த 5 நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம்

தெரிவித்துள்ளது. வட தமிழக, உள்மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளில், வெப்ப நிலை 40 டிகிரி வரையிலும், வடதமிகத்தின் கடலோரப் பகுதிகள், தென் தமிழகம், மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், 38 டிகிரி வரையிலும் பதிவாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்ப நிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் போது, அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, மன்னார் வளைகுடா பகுதியில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தென் தமிழகம், வடதமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் காரைக்கால் பகுதியில் இன்று லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது.

பருவமழை (18 )

இவ்வாண்டு இயல்பை விட அதிகமாக பருவமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலர் டாக்டர் ரவிச்சந்திரன், புதுடெல்லியில் இன்று இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், வரும் ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான பருவமழைக் காலத்தில், நீண்டகால சராசரியை விட 106 சதவிகிதம் அதிகம் மழை பெய்யக்கூடும் என தெரிவித்தார். ஆயினும், நாட்டின் வடமேற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் இயல்பை விட குறைந்த அளவில் மழை பதிவாகலாம் என்று அவர்கூறினார். இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை

இயக்குநர் திரு. எம். மஹாபாத்ரா இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், பருவமழைக் காலத்தின் முற்பகுதியிலேயே, எல்-நீனோ நிலவரங்கள் மாறக்கூடும் என்றும், நல்ல பருவமழையுடன் கூடிய லா-நீனா நிலவரங்கள், ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் உருவாகக் கூடும் என்றும் கூறினார். 1951 முதல், கடந்த ஆண்டு வரையிலான தரவுகளை வைத்துப் பார்க்கையில், எல்-நீனோ நிலவரங்களைத் தொடர்ந்து, லா-நீனா உருவான 9 சந்தர்ப்பங்களில், பருவமழை இயல்பைவிட அதிகமான அளவிலேயே அமைந்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

மூத்த பிஜேபி தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தமிழகத்தில், நெல்லை மாவட்டம், அகஸ்தியர் பட்டியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பழங்குடி மக்களின் கௌரவம், மற்றும் வளர்ச்சிக்கு, அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி இருப்பதாக மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

தேர்தல் கால சோதனைகளின் போது, நாடு முழுவதும் இதுவரை, 4 ஆயிரத்து 650 கோடி ரூபாய் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்களால் நாட்டில் வரி நிர்வாகம் மேம்பட்டு, வரி ஏய்ப்பு குறைந்து இருப்பதாக, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜகதீப் தன்கர் கூறியுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/PS/VM**